# தூத்துக்குடி மாநகராட்சி

## அவசரக் கூட்டப் பொருள்

2023ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் புதன் கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில்வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **31.05.2023** | 1. தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொது மக்கள் பயன்பாட்டிலுள்ள இராஜாஜி பூங்கா, எம்.ஜி.ஆர். பூங்கா, ரோச் பூங்கா ஆகிய இடங்களில், கடந்த 01.11.2021 முதல் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, தூத்துக்குடி சார்பில் மாதம் ஒன்றுக்கு ரூ.80,227/– செலவீனத்தில் பாதுகாத்து பராமரிப்பு செய்து வருகிறார்கள். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் சேவை, பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் வண்ணம் இராஜாஜி பூங்காவில் 5’ x 5’ அளவில் 1 எல்.ஈ.டி விளம்பரப்பலகை, எம்.ஜி.ஆர். பூங்காவில் 5’ x 5’ அளவில் 2 எல்.ஈ.டி விளம்பரப்பலகைகள், ரோச் பூங்காவில் 5’ x 5’ அளவில் 2 எல்.ஈ.டி விளம்பரப்பலகைகள் நிறுவிக்கொள்வதற்கு அனுமதி கோரி தலைமை மேலாளர் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, தூத்துக்குடி அவர்களின் 20.01.2023 ம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.<br><br>தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியினர் பூங்காக்களில் நிறுவும் எல்.ஈ.டி விளம்பரப்பலகைகளுக்கு அனுமதியும், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, தூத்துக்குடி சார்பில் மாதம் ஒன்றுக்கு ரூ.80,227/– செலவீனத்தில் பூங்காக்களை பாதுகாத்து பராமரிப்பு செய்து வருவதால் வங்கி நிறுவும் எல்.ஈ.டி விளம்பரப்பலகைகளுக்கு விண்ணப்பக்கட்டணம், விளம்பர உரிமக்கட்டணம் மற்றும் தரைவாடகை ஆகிய கட்டணங்களில் இருந்து விலக்கு அளித்திடவும் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன்அனுமதி வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. | 321) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | **நிபந்தனைகள்:**<br>**1.** மாநகராட்சியின் பொது மக்கள் சேவை செய்திகள் எல்.ஈ.டி விளம்பரப்பலகைகள் மூலம் ஒளிபரப்பு செய்திடல் வேண்டும்.<br>**2.** எல்.ஈ.டி விளம்பரப்பலகைகள் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாறாக அளவுகளை மாற்றம் செய்யக்கூடாது.<br>**3.** நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் எல்.ஈ.டி விளம்பரப்பலகைகளுக்கான உரிமம் முன்அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>எப்1/781/2023 | |
| | **2.** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொதுநிதி திட்டம் **2022–23** கீழ் Operation and maintenance of LED street light including Routine break down maintenance work in 60wards of Thoothukudi Town for the period of three months பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு M/s. Sudha Engineering, Thoothukudi – நிறுவனத்தாருக்கு **17.08.2022** முதல் **17.11.2022** வரையிலான காலங்களுக்கு பணி மேற்கொள்ள **29.06.2022**ம் தேதிய **134**ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டதன்பேரில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேலும் **3** மாத காலத்திற்கு அதாவது **18.11.22** முதல் **17.02.2023** வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேலும் **1** மாத காலத்திற்கும், அதனை தொடர்ந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு M/s. Sudha Engineering, என்பவருக்கு **30.5.2023** வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் காலத்தினை நீட்டித்து மேற்காள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே M/s. Sudha Engineering, என்பவருக்கு **18.11.22** முதல் **30.05.2023** வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நீட்டிப்பு செய்ததற்கும், அதற்கு இம்மாமன்ற தீர்மான எண் **167** நாள் **29.07.22** ன் படி மாதம் **1**க்கு ரூ.**6,37,555.45/–** (GST நீங்கலாக) வீதம் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **322)**அலுவலகக் குறிப்பு<br>**1.** மாமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br>**2.**அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:**<br>1. மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்ட 18.11.2022 முதல் 30.05.2023 வரை M/s. Sudha Engineering, நிறுவனத்தினருக்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று நீட்டிப்பு செய்ததை மாமன்றம் ஏற்கலாம்.<br>2. தெருவிளக்கு பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்த காலத்திற்கு மாதம் 1க்கு ரூ.6,37,555.45/– வீதம் (GST நீங்கலாக) பணி நீட்டிப்பு காலமான 18.11.22 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இறுதி செய்யும் வரை உள்ள காலத்திற்கான செலவின தொகையை பொது நிதியில் செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/32338/2022 | |
| | 3. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டலம் பெரியசாமி நகரில் அமைந்துள்ள பழைய கன்டெய்னர் கழிப்பிடம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அதிலுள்ள பழைய இரும்பு பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு 03.05.2023 அன்று ஏலம் நடைப்பெற்றது.<br>மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்ட நபர்களில் திரு.வெங்கடேஷ், ஏலக்கேள்வி தொகை ரூ.12,000/–, (GST 18% ரூ.2,160/–) சேர்த்து ஆக மொத்தம் ரூ.14,160/–ல், முன் வைப்பு தொகை ரூ.3000/– நீங்கலாக ரூ.11160/–ஐ செலுத்தியுள்ளார். மேற்படி ஏலத்தினை முடிவு செய்திடவும், மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. பழைய கன்டெய்னர் கழிப்பிடம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அதிலுள்ள பழைய இரும்பு பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு ஏலக்கேள்வி ரூ.12,000/–, (GST 18% ரூ.2,160/–) சேர்த்து ஆக மொத்தம் ரூ.14,160/–ஐ மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/1587 / 2023 | 323)அலுவலகக் குறிப்பு<br>1.அங்கீகரிக்கப் பட்டது<br>2.அனுமதிக்கப் பட்டது |
| | 4. தூத்துக்குடி மாநகராட்சியின் அறிஞர் அண்ணா பேருந்து நிலையமானது (பழைய பேருந்து நிலையம்) சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.58.67 கோடி மதிப்பீட்டில் புதிதாக | 324) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | வடிவமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்பட உள்ளது. மேற்படி பேருந்து நிலைய வளாகத்தில் பயணிகள் (ம) பொது மக்கள் தங்களது இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் நிறுத்தும் இடங்களுக்கான கட்டணம் மற்றும் பேருந்து நுழைவு கட்டணங்களை மாநகராட்சி நிர்வாகம் நேரடியாக பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அ.கு</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2 வாகன கட்டணம் தொடர்பான இரசீதுகள் அச்சடித்தல் மற்றும் பணியாளர்களுக்கான ஊதியங்களை பொது நிதியில் செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/1180/2022 | |
| | **5.** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி இல்லாத இடங்களில் மாநில நிதிக்குழு **(2022–2023)** திட்டத்தின் கீழ் ரூ.**1526.00** இலட்சம் மதிப்பீட்டில் **22.00** கி.மீ நீளத்திற்கு **135** தார் சாலைகள் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் **34226/2022**/SS**2** நாள் **21.04.2023**ன் படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/1917/2023 | 325)<br>மாமன்றத்தில் பதிவு செய்யப் பட்டது |
| | **6.** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி இல்லாத இடங்களில் மாநில நிதிக்குழு **(2023–2024)** திட்டத்தின் கீழ் ரூ.**2997.00** இலட்சம் மதிப்பீட்டில் **44.00** கி.மீ நீளத்திற்கு **286** தார் சாலைகள் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் **4549/2023**/SS**2** நாள் **15.05.2023**ன் படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. | 326)<br>மாமன்றத்தில் பதிவு செய்யப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/2309/2023 | |
| | 7. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.34 பாளை ரோடு மேற்கு 138/034/902542 வரிவிதிப்பு கொண்ட அகில இந்திய வானொலி நிலையத்திற்கு சொந்தமான கட்டிடத்திற்கு சொத்துவரி மொத்த தொகை ரூ.13,10,150/– (காலம் 2012–2013I முதல் 2022–2023II வரை) கேட்பு நிலுவையாக உள்ளது.<br>அகில இந்திய வானொலி நிலைய இயக்குனர் தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் மத்திய அரசு கட்டிடங்களுக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கக்கோரியும், தங்களது நிறுவன கட்டிடங்களுக்கு சொத்துவரியை நீக்கிவிட்டு மத்திய அரசு கட்டிடங்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் சேவை கட்டணம் ஏற்படுத்தவும், நிலுவைத்தொகையை நீக்கம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடித ந.க.எண் 24385/ஆர்1/2013–14 நாள் 20.01.2023ன்படி மத்திய அரசு கட்டிடத்திற்கு மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மத்திய அரசு நிறுவனங்களுக்கு பொருத்தமான சேவை கட்டணங்கள் 331/3%, 50%, 75% என்ற விகிதங்களின்படி பொருத்தமான சேவை கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>இந்நிலையில் மேற்படி மத்திய அரசு கட்டிடத்திற்கு சொத்துவரி ரத்து செய்து சேவைக்கட்டணம் கணக்கிடும் பணி நடைமுறைபடுத்த UTTS மென்பொருளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>மேற்படி கட்டிடத்தின் சொத்துவரி வரும் நிதியாண்டு 2023–2024I அரையாண்டு மற்றும் II அரையாண்டு வருகிற 01.04.2023 முதல் சொத்துவரி கேட்பு தாமகவே கணினியில் பதிவேற்றம் செய்யப்படுவதை 01.04.2023 முதல் கணினியில் தொடர் கேட்பு எழுப்பப்படாத வகையில் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஏனவே மேற்கண்ட கட்டிடத்திற்கு சொத்துவரி நிலுவை தொகை ரூ.13,10,150/–ஐ முழுமையாக நீக்கம் (Write-off) செய்திடவும் அரசு தெரிவித்துள்ள விதிமுறைகளுக்குட்பட்டு 01.04.2012 முதல் சேவை கட்டணம் நிர்ணயம் செய்து கேட்பு எழுப்பி வசூல் | 327) அலுவலகக் குறிப்பின்படி 2012–13–I முதல் 2022–23–II வரை நிலுவையாக உள்ள சொத்து வரியினை ரத்து செய்துள்ளதை நிதி இழப்பாக கருதி தணிக்கையில் ஆட்சேபணை தெரிவிக்கும் நிலையில் மேற்படி நிதி இழப்பிற்கு மாமன்றம் பொறுப்பாகாது என்ற நிபந்தையின் கீழ் அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br>அ1/111/2023/மே.ம | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:31.05.2023

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி